## ஜெர்மனியில் பழங்காலக் கார்களைக் கண்டு

# வரலாறு மீண்டும் உயிர்பெற்றதாய் உணர்ந்தேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!







**டசெல்டோர்ஃப் , செப். 4 -**

**ஜெர்மனியில் பழங்காலக் கார்களைக் கண்டு வரலாறு மீண்டும் கண்முன் உயிர்பெற்றதாய் இருந்தது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

ஜெர்மனி நாட்டின் டசெல்டோர்ஃப் நகரில் அமைந்துள்ள 'Classic Remise' அரிய கார்களுக்கான மையத்தினை பார்வையிட்ட பின்பு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

டசெல்டோர்ஃப் நகரில் அமைந்துள்ள 'Classic Remise' அரிய கார்களுக்கான மையத்தினூடே நடந்து செல்வது பழைய காலத்துக்கே பயணித்துச் சென்றதுபோன்ற உணர்வைத் தந்தது.

**இந்தியாவின் டெட்ராய்ட்டாகத் திகழும் சென்னை!**

இந்தியாவின் டெட்ராய்ட்டாகத் திகழும் சென்னையில் இருந்து, ஆட்டோமொபைல் துறையில் புதுமைகளைப் புகுத்தும் பெருமைக்குரிய மரபைக் கொண்ட ஜெர்மனிக்குச் சென்று, உலகின் முதல் கார், பழமையான பந்தயக் கார் உள்ளிட்டவற்றை அருகில் பார்த்த பெறற்கரிய இன்பத்தை அடைந்தேன்.

பழம் பொக்கிஷங்களுக்கிடையே நின்று அவற்றைக் காண்கையில், வரலாறு மீண்டும் கண்முன் உயிர்பெற்றதைப் போல இருந்தது. இறந்த காலத்தின் அறிவுக்கும் எதிர்காலத்துக்கான கற்பனைக்கும் இடையே ஓயாமல் நடக்கும் உரையாடலை உணர்ந்தேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## அமெரிக்க வரி விதிப்பால் திருப்பூர் தவிக்கிறது!

# டிரம்பிடம் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு கண்டு 'விஸ்வகுரு' எனும் தங்கள் பட்டப்பெயருக்கு நியாயம் செய்யுங்கள்!

## பிரதமர் மோடிக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, செப்.4-

அமெரிக்க அதிபர் அறிவித்துள்ள வரி விதிப்பினால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து பிரதமர் மோடிக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலியுறுத்தல் குறித்த சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கண்டன ஆர்ப்பாட்டம் மாபெரும் வெற்றி!**

**மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களே!**

**தாங்கள் ஆதரித்த ட்ரம்ப் அவர்கள் விதித்துள்ள #USTariff காரணமாக, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும், இந்தியாவின் பல மாநிலத் தொழிலாளர்களுக்கும் வாழ்வளிக்கும் #DollarCity திருப்பூர் தவிக்கிறது.**





**குஜராத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு குறைந்த விலையில் இரஷ்ய கச்சா எண்ணெய் கிடைப்பதற்காக, பல ஆயிரம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் எங்கள் ஏற்றுமதியாளர்களை நீங்கள் பரிதவிக்க விடுவது எந்த விதத்தில் நியாயம்?**

**நான் ஏற்கெனவே, கடிதத்தில் கூறிய நிவாரணங்களை உடனடியாக அறிவித்து, ஆவன செய்யுங்கள்! அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வுகண்டு, #VishwaGuru எனும் தங்கள் பட்டப் பெயருக்கு நியாயம் செய்யுங்கள்!**

**இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்து உணர்வுகளைப் பதிவுசெய்த அனைத்துக்கட்சி தலைவர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் பொதுமக்களுக்கும் நன்றி.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## கண்டோன்மெண்ட் நகர மாணவர் அணி அமைப்பாளர் எம்.பி.மகேஷ் - நகர வர்த்தகர் அணி

# அமைப்பாளர் என்.ஆர்.கே.ஈஸ்வரன் இல்லத் திருமண வரவேற்பு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் - ஆர்.எஸ்.பாரதி – கழகத்தினர் வாழ்த்துகின்றனர்!

சென்னை, செப். 4–

கண்டோன்மெண்ட் நகர மாணவர் அணி அமைப்பாளர் எம்.பி.மகேஷ் நகர வர்த்தக அணி அமைப்பாளர் என்.ஆர்.கே.ஈஸ்வரன் ஆகியோர் இல்லத் திருமணத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா. மோ.அன்பரசன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மற்றும் கழகத்தினர் நேரில் வந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.

கண்டோன்மெண்ட் நகர வர்த்தகர் அணி அமைப்பாளர் என்.ஆர்.கே.ஈஸ்வரன் இ.ஹேமலதா தம்பதியினரின் மகன் ஆர்.அருண்குமார், ஜி.வெங்கடேசன் வி.புனிதா தம்பதியினரின் மகள் வெ.வைஷாலி திருமண விழா திருப்போரூர் முருகன் கோயிலில் நடைபெற்றது.

பம்மல், பொழிச்சலூர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஸ்ரீ கணேஷ் மகாலில் திருமண வரவேற்பு விழா காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

கண்டோன்மெண்ட் நகர கழகச் செயலாளர் டி.பாபு வரவேற்புரை ஆற்றினார்.

இத்திருமண நிகழ்ச்சிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ்,

என்.சந்திரன், ப.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னார்ட், ஜி.கே.ரவி,

அ.தமிழ்மாறன், சாய்ஜெய்காந்த் பாரதி, கோல்டு டி.பிரகாஷ், S.ஆனந்தராஜ், J.கவிச்சக்கரவர்த்தி, மு.தமிழ்ச்செல்வி மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக வந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.

இறுதியில் கண்டோன்மெண்ட் நகர மாணவர் அணி அமைப்பாளர் எம்.பி. மகேஷ் நன்றியுரையாற்றினார்.

## திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க., நான்கு சட்டமன்றத் தொகுதிகளின்

# பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்!

திருவண்ணாமலை, செப். 4 –

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. விற்கு உட்பட்ட நான்கு சட்டமன்றத் தொகுதிகளின் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. ஆலோசனைக்கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

02.09.2025 செவ்வாய்க் கிழமை காலை 10.30மணிக்கு திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க.விற்கு உட்பட்ட திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர், கலசப்பாக்கம், செங்கம் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளின் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகித்தார்.

சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் டாக்டர் இரா.மாசிலாமணி, பா.செந்தமிழ்ச்செல்வன், டாக்டர் மாலதி நாராயணசாமி, எஸ்.பி.மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்ட கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநில தொ.மு.ச. துணைத் தலைவர் க.சௌந்தரராசன், ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், சி.சுந்தபாண்டியன், மெய்யூர் சந்திரன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிர மணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், செங்கம் நகரச் செயலாளர் மு.அன்பழகன், பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், எம்.சீனுவாசன் மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாநகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன் நன்றி கூறினார்.

# முதல்வரும், கழகத் தலைவரும்!



**மு**தலீடுகளை ஈர்த்து வருகிறார் முதல்வர் !

பெரியாரின் படத்தை முதலீடாய்க்
கொடுத்து வருகிறார் கழகத் தலைவர் !

பொருளாதாரத்தைப்
பெருக்கி வருகிறார் முதல்வர் !

தமிழ்நாட்டில் பெரியாரே
பொருளும் ஆதாரமும் என்பதை
உணர்த்தி வருகிறார் கழகத் தலைவர் !

இன்றைய தலைமுறையை
வளர்த்து வருகிறார் முதல்வர் !

நாளைய தலைமுறைகளுக்கும்
விதைத்து வருகிறார்
கழகத் தலைவர் !



பேராசிரியர்
**சுப.வீரபாண்டியன்**